2. தகவல் கோரல்

அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் போலீஸ் அடக்கு முறை சம்பந்தமாகவும், ஏற்கனவே 14-ஆம் தேதி, எங்கள் கண்களுக்கு முன்னால் எங்கள் கட்சியைச் சேர்ந்த லகுமையா என்ற தொழிற்சங்கத் தலைவர் மண்டையை உடைத்து காயப் படுத்தி அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் பங்களூர் மருத்துவ மனையில் இருக்கிறார்கள். அது சம்பந்தமாக புகார் செய்யப் போனவர்கள்மீது கொலை வழக்கு போட்டு செக்ஷன் 307ன் கீழ் அவர்களை கைது செய்திருக்கிறார்கள். இவ்வளவு கொடுமை யான காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த அடக்குமுறை சம்பந்தமாக விவாதிக்க தங்களிடம் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அரசுக்குப் போய் பதில் வந்த பின் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு ரா. உமாநாத்: இது ஒரு சீரியஸான க்வெஸ்டின் எம். எல். ஏ. க்கு முன்னால் போலீஸார் அடித்திருக்கிறார்கள் என்று சொன்னால்—

The Police are challenging the authority of the House நேற்று கொடுத்த நோட்டீஸுக்கு கவர்ன்மென்ட் இன்றைக்கு தயாராயில்லை என்று சொன்னால் . . ...

Where is the security to a person in this State?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் வந்தவுடன் அதை அவைக்கு வைக்கிறேன்.

(ஆ) விருது நகரில் எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருக்கும் கூட்டத்திற்கு அனுமதி அளிப்பது

திரு அ. ரகுமான்கான்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாத யாத்திரை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான பேர்கள் அவர்களோடு செல்கிறார்கள். ஆனல் விருதுநகரில் அவர்கள் பேசுவதற்கு, மேடை அமைப்பதற்கும் சர்க்கார் அனுமதி கொடுத்து விட்டது. இப்போது போலீஸ் அதிகாரிகள் அந்த மேடைக்கு அனுமதி ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே அனுமதி கொடுத்துவிட்டு இப்போது திடீரென்று ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தலையிட்டிருப்பதால் இந்த நடவடிக்கை என்று தெரிகிறது. நான் உங்கள் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவெனில், டிராபிக்—க்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. கலைஞர் எங்கு போனாலும் டிராபிக்தான், மேடை அமைப்பதற்கும் அனுமதி கொடுத்து விட்டு.....................

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றி நோட்டீஸ் கொடுக்காமல் திடீரென்று எழுந்து கேட்டால் நான என்ன பதில் அளிக்க முடியும்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதை திடீரென்று எழுப்புகிற பிரச்னையாகக் கருதாமல் ஒரு அசம்பாவிதமான சூழ்நிலை உருவாவதற்கு ஏதோ சில காரணங்கள் இருந்து அதன் விளைவாக அதற்குப் பின்னர் வேறுவிதமான நிலைமைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக அரசாங்கத்தின் கவனத்திற்கு திடீரென்று கொண்டு வர நேரிடுகிறது. ஏனென்றால், இன்று மாலை அந்தப் பகுதிக்கு அவர்கள் செல்கிறார்கள். ஆகவே அந்தக் கூட்டம் தடுக்கப்படுமானால், கொடுத்த அனுமதி நிறுத்தப்படுமானால் ஒரு 50,000 பேர்கள் கூடுகிற இடத்தில் தவறான சூழ்நிலை உருவாகும்? அரசின் கவனத்திற்கு இதை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி எழுதிக் கொடுங்கள், அதற்கு நான் அமைச்சர் அவர்கள் பதிலை வாங்கித் தருகிறேன். இதிலே பிரச்னை ஒன்றுமில்லை.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தாங்கள் எடுத்துக் காட்டிய கருத்திலே எங்களுக்கு மாறுபாடு இல்லை, கடிதம் எழுதி, அது போய் வருவதற்கு 3 நாட்கள் ஆகும். ஆனால் இங்கே நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு போகிறேன்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றைக்கு கானரா வங்கி செயல் படாமல் இருக்கிறது. அங்கே கொந்தளிப்பு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. திருசெந்தூரில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி தாங்கள் காலை 6.00 மணிக்கு எழுதிக்கொடுத்துவிட்டு, 10 மணிக்கு வந்து என்ன ஆயிற்று என்று கேட்பது, முறையல்ல. அதை இன்றே எடுத்துக் கொள்வதற்கு இல்லை.

(இ) அமைச்சர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப் பெறுதல்